00537

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப்பீடம்
பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022
இறுதிப்பரீட்சை – 2023
கட்டம் - II

**STP8212/STP8312/ESP2112** – பல்தரக்கற்பித்தல்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 10.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி I இன் சகல வினாக்களுக்கும் பகுதி II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. பல்தரக்கற்பித்தலின் பண்புகள் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.
2. பல்தரக்கற்பித்தல் ஏன் அவசியமானது என்பதற்கு **நான்கு** (04) காரணங்களை வழங்குக.
3. கிரியாகோ (Kyriakou – 1997) என்பவரால் குறிப்பிடப்பட்ட கற்றல் நடைபெறுவதற்கு அத்தியவசியமான **மூன்று** (03) உளவியல் நிலைமைகளைக் குறிப்பிடுக.
4. வகுப்பறை முகாமைத்துவம் என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
5. பாடப்பங்கீடு (Subject Staggering) என்ற பதத்தின் கருத்தைச் சுருக்கமாக விளக்குக.
6. மாணவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நீங்கள் கற்றல் விளைவுகள் தொடர்பில் தெளிவுடையவர்களாக இருத்தல் வேண்டும். ஒரு கற்றல் வெளியீடு என்றால் என்ன? என்பதைச் சுருக்கமாக விளக்குக.
7. பல்தர வகுப்பறையில் பயன்படுத்தப்படும் ஒரு மதிப்பீட்டு முறையாக மாணவர் வேலைத் தொகுப்பைச் (Portfolios of Pupils Work) சுருக்கமாக விளக்குக.
8. முக்கிய கலைத்திட்ட கருப்பொருள்களை அடையாளம் காணும் போது நீங்கள் பின்பற்ற வேண்டிய **மூன்று** (03) படிகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் முதல் படியைச் சுருக்கமாக விளக்குக.

பகுதி - I (5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. பல்தர ஆசிரியர்களுக்கு தேவையான குறிப்பான திறன்கள் **நான்கைக்** (04) குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

ii. ஒரு பல்தர வகுப்பு மாணவர் கற்றலில் அடையப்படும் நன்மைகள் **மூன்றினைச்** (03) சுருக்கமாக விளக்குக.
(06 புள்ளிகள்)

iii. பல்தர வகுப்பறை மட்டத்தில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் **நான்கினை** (04) இனங்கண்டு, அவற்றை வெற்றிகொள்வதற்கான உமது ஆலோசனைகளை வழங்குக. (10 புள்ளிகள்)

10.

i. நடத்தைசார் மாதிரி அத்துடன் அறிவாற்றல் மாதிரியை வேறுபடுத்துக.
**(04 புள்ளிகள்)**

ii. தொடர்பற்ற அறிவைவிட ஒழுங்கமைக்கப்பட்ட அறிவு ஏன் சிறந்தது?
**(06 புள்ளிகள்)**

iii. முறையான கற்றல் இடம்பெறுவதற்கு ஒரு ஆசிரியர் என்ன செய்ய முடியும் (குறைந்தது நான்கு (04) விடயங்கள்)
**(10 புள்ளிகள்)**

11.

i. ஒரு உடன்பாடான கற்றல் சூழலின் அம்சங்கள் **நான்கினைக்** (04) குறிப்பிடுக.
**(04 புள்ளிகள்)**

ii. மாணவர்களின் தவறான நடத்தைக்கான காரணங்கள் **மூன்றினைச்** (03) சுருக்கமாக விளக்குக.
**(06 புள்ளிகள்)**

iii. ஒரு ஆசிரியராக மாணவர்களின் தவறான நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்கு உங்களால் என்ன செய்ய முடியும்
**(10 புள்ளிகள்)**

12.

i. ஒரு பல்தர வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய உள்ளக வளங்கள் **நான்கினைப்** (04) பெயரிடுக.
**(04 புள்ளிகள்)**

ii. இரண்டு அச்சு அடிப்படையிலான பொருட்களை (Print – based materials) குறிப்பிட்டு, அவற்றை ஒரு பல்தர வகுப்பறையில் எவ்வாறு ஆக்கபூர்வமிக்க வகையில் பயன்படுத்தமுடியும் என்பதைச் சுருக்கமாக விளக்குக.
**(06 புள்ளிகள்)**

iii. மின்னியல் சார் வளங்கள் (Electronic – based resources) **இரண்டைக்** (02) குறிப்பிட்டு, ஒரு பல்தர வகுப்பறையில் அவற்றை பயன்படுத்தும் போது ஏற்படும் சவால்களை இனங்காண்பதுடன் அச்சவால்களை வெற்றிகொள்வதற்கான உங்களது ஆலோசனைகளை வழங்குக.
**(10 புள்ளிகள்)**

13.

i. இடையீட்டு கணிப்பீடு என்பதனால் நீங்கள் கருதுவது யாது?
**(04 புள்ளிகள்)**

ii. இறுதி கணிப்பீடுகள் யாவை? அவற்றை நீங்கள் ஒரு பல்தர வகுப்பறையில் மிக விளைதிறன் வகையில் எவ்வாறு பயன்படுத்தமுடியும்.
**(06 புள்ளிகள்)**

iii. கணிப்பீடு அத்துடன் மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை நீங்கள் ஆசிரியர்களாக அத்துடன் உங்களது மாணவர்களுடன் இணைந்த வகையில் எவ்வாறு காண்கிறீர்.
**(10 புள்ளிகள்)**

14.

i. கலைத்திட்ட அபிவிருத்தியில் பயன்படுத்தப்படுகின்ற **மூன்று** (03) பிரதான அணுகுமுறைகளைப் பெயரிடுக.
**(04 புள்ளிகள்)**

ii. பாட அடிப்படையிலான கலைத்திட்டம் (Subject – Based Curriculum) என்றால் என்ன? என்பதைச் சுருக்கமாக விளக்குக.
**(06 புள்ளிகள்)**

iii. உங்களது பாடசாலை சூழலில் இருந்து பெறக்கூடிய ஒரு சுருளி அணுகுமுறையை (Spiral approach) இரண்டு (02) உதாரணங்களுடன் விளக்குக.
**(10 புள்ளிகள்)**

பகுதி - **II**- 60 புள்ளிகள்

பகுதி - **I,II** – 100 புள்ளிகள்

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -